# பாஷையூர் கடலில் 4 பீரங்கிப் படகுகள் மக்கள் அச்சத்தால் மீண்டும் இடப்பெயர்வு


பக்கங்கள் நான்கு    விலை ரூபா:- 3-50

முரசொலி

முரசு 04 ஒலி 227 வெள்ளி 28-09-1990 (புரட்டாதி 12) ற.அவ்வல் 08


நேற்றுக் காலை தொடக்கம் பாஷையூர் கடற்பகுதியில் நான்கு பாரிய பீரங்கிப் படகுகளும் அதனைச்சுற்றி பல சிறிய படகுகளும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கோட்டையிலிருந்து இராணுவத்தினர் வெளியேறியதைத் தொடர்ந்து யாழ். கரையோரப் பகுதி மக்கள் குறிப்பாக கொய்யாத்தோட்டம் ஈச்சமோட்டை வாழ் மக்கள் பாஷையூர்க்கடலில் இப்படகுகள் நடமாட்டத்தை அவதானித்தனர். இதனையடுத்து, முன்னர் குடிபெயர்ந்து சென்று நேற்று முன்தினம் மீளவும் வந்த இவர்கள் பழையபடி வேறு இடங்களுக்குச் சென்றனர். இப் பீரங்கிப்படகிலிருந்தும், மண்டைதீவிலிருந்தும் யாழ். நகரின் கரையோரப்பகுதியையும், கோட்டைப் பகுதியையும் நோக்கி விட்டு விட்டு கலிபர், ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஷெல்கள் குருநகர், கரையூர், சின்னக்கடைப் பகுதிகளில் வீழ்ந்து வெடிக்கின்றன. ப 25-ஸ்ரீ

# கோட்டைராணுவம் அகன்றது புலிகளிடம் சரண் போன்றதே

## அரசின் தீவிரவாதிகள் மத்தியில் சலிப்பு என்கிறது பி. பி. ஸி

யாழ். கோட்டையிலிருந்து ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படைகள் வெளியேறிய செயலானது ஒருவகையில் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்ததற்கு ஒப்பானதே என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு அரசியல் வட்டாரங்களின் இந்த அபிப்பிரயத்தை கொழும்பில் உள்ள இந்திய வெகுசனத் தொடர்பு சாதனம் ஒன்றின் பிரதான பிரதிநிதி ஒருவரும் வலியுறுத்தி பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசு விடுதலைப்புலிகளை ஒடுக்கவென மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இவ்வெளியேற்றம்தடையாக இருக்கும் புலிகளை எதிர்ப்பதற்கான முயற்சிகளைப் பலவீனப்படுத்


..04ஆம் பக்கம் பார்க்க


## முல்லையிலும் திலீபன் நிகழ்ச்சிகள்

முல்லைத்தீவு மாவட்டத்திலும் திலீபன் நினைவுநாள் இறுதி நிகழ்ச்சிகள் பெரும் எடுப்பில் நடாத்தப்பட்டுள்ளன'

புதுக்குடியிருப்பு பகுதியில் இரவு நிகழ்ச்சிகளும் அன்னதானங்களும் பொதுக்கூட்டங்களும் இடம்பெற்றன. இதில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்குகொண்டனர்.

ஒட்டிசுட்டான் பகுதியில் இடம்பெயர்ந்தவர்களுக்கு உணவுப்பார்சல்கள் வழங்கப்பட்டன.

இதேசமயம் மாங்குளம் ஒலுமடு, கருப்பட்டைமேடு கிராமங்களிலும் திலீபனின் அஞ்சலிக் கூட்டங்கள் இடம்பெற்றன. அலங்காரப் பந்தல்களும் காணப்பட்டன. (து)

## யாழ்நகரில் வெளிவரும் தினசரியான 'உதயன்' மீது தாக்குதல் ஒருவர் பலி; கட்டிடம் சேதம்

நேற்று நண்பகல் 12.45 மணியளவில் திடீரென வந்த இரு பொம்மர்கள் யாழ்' நாவலர் வீதியில் நடாத்திய தாக்குதலில் 'உதயன்' பத்திரிகை நிறுவனம் சேதமடைந்தது.

இத்தாக்குதலில் உதயன் பத்திரிகை விநியோகப் பகுதியில் பணிபுரியும் செ.பத்மநாதன் (வயது 50 திருமலை)


—04ஆம் பக்கம் பார்க்க


## அழுகிய நிலையில் இருந்ததை காகங்கள் கொத்தின கோட்டையில் 5 ராணுவத்தினர் சடலங்கள் காணப்பட்டன

யாழ், கோட்டை பகுதியிலிருந்து ஐந்து இராணுவத்தினரின் சடலங்கள் அழுகிய நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பொலிஸ் நிலையத்துக்கும் கோட்டை வாயிலுக்கும் இடையில் இருந்து இந்த சடலங்கள் நேற்று காணப்பட்டன.

காகங்கள் கொத்திய நிலையில் அழுகிய நிலையில் இவை காணப்பட்டன இறந்தவர்கள் காக்கி காற்சட்டை அணிந்திருந்தனர்.

கடந்த 13-ம் திகதி இடம்பெற்ற கோட்டை முற்றுகையின் போது விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதலினால் இறந்த இராணுவத்தினரின் சடலங்களே இவை என


—04 ஆம் பக்கம் பார்க்க


## கோட்டை பொறி வெடிகளை அகற்றும் வேலை தொடர்கிறது

யாழ்.கோட்டையில் பொறி வெடிகளை அகற்றும் பணியில் விடுதலைப் புலிகள் நேற்று தொடர்ந்தும் ஈடுபட்டனர்.

கண்ணிவெடிகளை அகற்றுவதில் விசேட பயிற்சிபெற்ற போராளிகள் இப்பணியில் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

கண்ணிவெடிகள், பொறி வெடிகள் முற்றாக அகற்றப்


—04ஆம் பக்கம் பார்க்க


## உள்ளே

யாழ். கோட்டை அமைப்பு


பக்கம் மூன்றில்


## வீரமரணமடைந்த 6 போராளிகள் இன்று கோட்டையில் தகனம்

370 வருடகாலமாக அடிமையின் சின்னமாக விளங்கிய யாழ். கோட்டையை கைப்பற்றுமுகமாக கடந்த ஒகஸ்ட் 5 ஆம் திகதி விடுதலைப் புலிகளால் தொடுக்கப்பட்ட தாக்குதலின் போது வீரமரணமடைந்த ஆறு போராளிகளின் உடல்கள் நேற்று புலிகளினால் மீட்கப்பட்டுள்ளது,

இந்த வேங்கைகளின் உடல்கள் அடங்கிய பேழைகள் இன்று காலை பத்து மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அஞ்சலிக்காக வைக்கப்படும் மாலை 4 மணியளவில் இப் பேழைகள் ஊர்வலமாக நாச்


—04 ஆம் பக்கம் பார்க்க


## கோட்டையில் புலிக்கொடியை பார்ப்பதில் மக்கள் ஆர்வம்

யாழ். கோட்டையிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட்டதை அடுத்து பெருமளவான மக்கள் யாழ் கோட்டையில் பறக்கும் விடுதலையின் சின்னமான புலிக்கொடியைப் பார்ப்பதற்காக நேற்றும் யாழ்நகரை நோக்கிப் படையெடுத்தனர்.

சிலர் குடும்பம் குடும்பமாக கோட்டையைப் பார்க்கச்


—04ஆம் பக்கம் பார்க்க


## இறந்தோர், காணாமல்போனோர் தொகை 3800 - யாழ். பிரஜைகள் குழு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஜுன் முதல் செப்டெம்பர் இறுதி வாரம்வரை பாதுகாப்புப்படையினரின் தாக்குதல்களின் போது இறந்தோர் அல்லது காணாமல் போனோரின் எண்ணிக்கை 3800 என்று யாழ். பிரஜைகள் குழு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவுக்கு அனுப்பி


—04ஆம் பக்கம் பார்க்க


## பி. பி. ஸி. கணிப்பில் உலகில் சிறந்த விடுதலை அமைப்பு விடுதலைப்புலிகள் இயக்கம்

உலகிலுள்ள விடுதலை அமைப்புக்களில் முதன்மையானதாக விடுதலைப்புலிகள் இயக்கத்தை உலகப் புகழ் பெற்ற பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (பி.பி.ஸி) கணித்துள்ளது.

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற திலீபனின் நினைவு தினக்கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய உறுப்பினர் தேவர் இதனைத்


—04ஆம் பக்கம் பார்க்க


## வீரமரணம்

நேற்று மாங்குளம் ராணுவ முகாமை சுற்றி பொம்மர்கள் ஹெலிகள் நடாத்திய தாக்குதலில் புலிப்போராளி அருள் வேலுப்பிள்ளை சிவகுமாரன் நெடுங்கேணி வீரமரணமடைந்தார். து

## அடுத்த வருட பாதுகாப்பு நிதி மேலதிகமாக 148 கோடி ரூபா

பாதுகாப்புச் செலவினங்களுக்காக அடுத்த வருடம்மேலதிக 148 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

இவ் வருடம் பாதுகாப்புச் செலவினங்களுக்காக 1029 கோடியே 32 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால் அடுத்த வருடம் இத்தொகை 1178 கோடி 13 லட்சத்து இருபத்திமூாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இ

## நிவாரணப்பொருட்கள் வந்தன

பளைப் பகுதி மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் லொறிகள் மூலம் வந்து சேர்ந்துள்ளன.

கிளிநொச்சியில் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ள உணவுப் பொருட்களை மேலும் வாகனங்கள் மூலம் கொண்டு வருவதற்கு பளை உதவி அரசாங்க அதிபர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் இருலொறிகள் மூலம் உரவலககள் கொண்டு வருவதற்கு அலுவலக அதிகாரிகள் வவுனியாவுக்குச்சென்றுள்ளதாக அறியப்படுகிறது. (ப.3கி)

## பங்கீட்டு அட்டை விநியோகம்

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 25 கிராமசேவையாளர் பிரிவிலும் பங்கீட்டு அட்டைகள் வழங்கும் வேலை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

சிற்றூரவைகளினால் வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டைகள் அனைத்தும் சகலரிடமிருந்தும் பெற்று, அந்தந்த கிராம சேவையாளர்களினால் கையொப்பமிட்டும் உதவி அரசாங்க அதிபரினால் மேலொப்பமிட்டும் உரியவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

கிராமசேவையாளர்களினாலும் உதவி அரசாங்க அதிபரினாலும் கையொப்பமிடப்படாத எந்தப் பங்கீட்டு அட்டைக்கும் இனிமேல் பொருட்கள் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12கி)

## சிறுவிளம்பரம்

**புத்தகம்**

விரத பூஜா விதானம், இந்நூலில் 34 விரதங்களும் அந்தந்ததினத்தன்று ஆராதிக்க வேண்டிய தேவதையின் பூஜா விதானமும் கொடுக்கப்பட்டுள்ளன. விலை 45 ரூபா. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். 09037

## 31-ம் நாள் நினைவஞ்சலி

ஜனனம் 11. 2. 1970 — மரணம் 28. 8. 1990

**நாகராசா ஆனந்தரவி**
(ரவி)

பொம்மரினால் குண்டுபேரட்டு - எம்
பொன்னாட்டை அழிப்போமென்ற
வம்பர்களின் குண்டுக்கு
வாழ்விழந்து போனஎங்கள்
நண்பனே உன்[illegible]
நாம் கலங்கி யேங்குகின்றோம்.

உடன்பணியாற்றும்
நண்பர்கள்.
09088

## காலமானார்

**செல்வி மாலதி ஜோசப்.**
(ஆசிரியை றோ. க. த. க. பாடசாலை தாழ்வுபாடு, மன்னார்)

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், மன்னார் எமில் நகரில் வசித்தவருமாகிய செல்வி மாலதி ஜோசப் 06. 09. 90 அன்று அதிகாலை காலமானார். இவர் காலம் சென்ற C. S ஜோசப் (O. A, கச்சேரி, மன்னார்), திருமதி ஜெயமணி ஜோசப் ஆகியோரின் அன்பு மகளும், ஜெயபாலா (அவுஸ்திரேலியா), செல்வபாலா (பெனோ) சவுதிஅரேபியா; இரட்ணபாலா- (இலங்கை வங்கி மன்னார்), குமுதினி (பலாலி, ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஜெயந்தி (அவுஸ்திரேலியா) யின் அன்புமைத்துனியும் ஜெயப்பிரபாவின் அன்பு மாமியும், திரு. ஜெகநாதன் புஸ்பம் (சுண்டிக்குளி) ஆகியோரின் பெறாமகளும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் (06. 09 90-ல்) பி. ப. 5 மணியளவில் மன்னார் சேமக்காலையில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
இரட்ணபாலா
09094

## அறிவித்தல்

பொதுமக்களின் நலன் கருதி இல. 6, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியில் அமைந்துள்ள (DIA ELECT RONIC COMPLEX) ஸ்தாபனத்தில்

**வெளிநாட்டு நாணயம்**

மாற்றிக் கொடுக்க ஒழுங்குகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளதை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.
09095

# சிறந்த கிராமசேவையாளருக்கு
# வெளிநாட்டில் நிர்வாகப் பயிற்சி

சிறந்த கிராமசேவையாளர்களைத் தெரிந்து அவர்களுக்கு வெளிநாட்டில் பயிற்சி வழங்கும் திட்டமொன்றை அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின்படி 1400 சிறந்த கிராம சேவகர்களுக்கு வெளிநாட்டில் கிராம நிருவாகத்துறையில் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சிக்கான கிராம சேவகர்கள் உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்படுவர்.

கிராம சேவையாளர்களின் சேவைத்திறன், கல்வித் தகைமை, அவசர வேளைகளில் அவர்கள் செயற்பட்ட விதம், நிவாரணப்பணிகளில் குறித்த கிராமசேவையாளர் நடந்து கொண்ட விதம், பொதுமக்கள் அவர் பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே வெளிநாட்டுப் பயிற்சிக்கு தகுதியான கிராம சேவையாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (கி)

## திலீபன் நினைவாகக் குடாநாடெங்கும் பரவலாக உண்ணாவிரதம், அஞ்சலி நிகழ்ச்சிகள்

யாழ். கோட்டையை மீட்பதற்காக 100ற்கு மேற்பட்ட போராளிகளை இழந்துள்ளோம். இப்போராளிகள் அனைவரும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். எமது சொந்த மண்ணை மீட்பதற்காக வெளிமாவட்டத்தை சேர்ந்த போராளிகளே போராடுவது எமக்கு வெட்கக்கேடான விடயமாகும். இதை உணர்ந்து எம்மக்கள் போராட்டத்திற்குப் பங்களிப்பதோடு மட்டுமன்றி இங்கிருந்து அம்பாறை வரை சென்று தமிழ் மண்ணை மீட்க வேண்டும்.

இவ்வாறு கொடிகாமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தியாகி திலீபன் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி குறிப்பிட்டார்.

கொடிகாமம் பிரதேசப் பொறுப்பாளர் இராகுலன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

மிருசுவிலில் திலீபனின் நினைவாக நேற்று முன் தினம் இடம்பெற்ற உண்ணாவிரதத்தில் பெரும் தொகையானோர் கலந்து கொண்டனர். மிருசுவில் பொறுப்பாளர் நந்தன் இதற்குத் தலைமை தாங்கினார்.

நாவற்குழி கோயிலாக்கண்டி கிருஷ்ணர் ஆலயத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை திலீபனின் நினைவாக உண்ணா விரதம் இடம்பெற்றது.

நாவற்குழி தெற்கில் ஸ்ரீ மகாவிஷ்ணு சனசமூக நிலையத்தில் திங்கட்கிழமை காலை திலீபனின் நினைவுதின உண்ணாவிரதமும், மாலை 3 மணியளவில் திலீபனின் நினைவு அஞ்சலிக்கூட்டமும், சிறப்பாக நடைபெற்றன. அதில் கைதடி, நாவற்குழி பொறுப்பாளர் அப்பனும், கோயிலாக்கண்டி சிற்றூரவை உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

திலீபனின் இறுதி நாள் நினைவஞ்சலிக் கூட்டம் வதிரி அம்மன் கோயில் மைதானத்தில் வி.பு. ம. முன்னணியைச் சேர்ந்த அரசண்ணா தலைமையில் நடைபெற்றது.

வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை அங்கு பேசுகையில் திலீபனின் இந்த மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தின் இறுதி நாளான திலீபனின் கனவுகளை நனவாக்கும் வகையில் எமது புலிக்கொடியைக் கோட்டையில் இன்று ஏற்றி வைத்து விட்டோம். பொது மக்களின் பலமும், ஆதரவும் இன்று போல் என்றும் இருக்குமானால் நாம் கோட்டையிலிருந்து அந்நியரைத் துரத்தியது போன்று இந்த மண்ணிலிருந்தே அவர்களை முற்றாக வெளியேற்ற முடியும் என்று கூறினார்.

இந்த அஞ்சலிக் கூட்டத்தில் கவிஞர் வாஞ்சிநாதன், வட்ட அவைத் தலைவர் இரத்தினம், திரு. கந்தசாமி கரவெட்டி வட்டப் பொறுப்பாளர் குணபால், உடுப்பிட்டி பொறுப்பாளர் மைக்கல், பருத்தித்துறை வட்ட பொறுப்பாளர் மோகன் ஆகியோரும் பேசினர். (ப26கி

## தபாலகம் இடமாற்றம்

அச்சுவேலி தபாலகம் பாதுகாப்பான இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் அச்சுவேலிப் பொதுச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட பொம்மரின் குண்டு வீச்சுச் சம்பவத்தால் தபாலகத்தின் பின்பகுதி சேதமுற்றதுடன் தபாலக ஊழியர்கள் மயிரிழையில் உயிர் தப்பியமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அச்சுவேலியில் ஊரெல்லைத் தெருவில் உள்ள ஒரு தனியார் வீட்டில் தபாலகம் பாதுகாப்பாக இயங்கி வருகின்றது. (32கி)

## தபால் ஊழியர் இக்கட்டுநிலையில்

கிழக்கு மாகாணத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்து வந்துள்ள தபால் திணைக்கள ஊழியர்களுக்கு ஜுலை மாதத்தின் பின் சம்பள முற்பணம் வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாண அரசாங்க ஊழியர்களில் தற்போது வேலைக்கு வராதவர்கள் வேலை இழந்ததாகக் கருதப்படுவார்கள் என்ற வானொலி அறிவிப்பின் காரணமாகவே முற்பணம் வழங்கப்படுதல் நிறுத்தப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

போக்குவரத்து இல்லாத நிலையிலே ஏனைய மாவட்ட அரச ஊழியர்களைப்போன்று கிழக்கு மாகாண ஊழியர்களும் இங்கிருந்து செல்ல முடியாதுள்ளனர். தற்போது தபால் சேவை ஓரளவுக்கு நடைபெறுவதால் கொழும்பிலிருந்து ஏற்ற அறிவுறுத்தல்களைப் பெற்று திணைக்கள உள்ளூர் அதிகாரிகள் இந்த ஊழியர்களுக்கு சம்பள முற்பணம் வழங்க ஆவனசெய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட ஊழியர்கள் கேட்டுள்ளனர். (கி)

## பரீட்சைத் திணைக்களம் வேகமாக இயங்குகிறது

இந்தஆண்டிற்கான க.பொ.த. சாதாரணதரப்பரீட்சை நடைபெறுவதற்குரிய திகதி அறிவிக்கப்பட முன்புபரீட்சை வினாத்தாள் திருத்துவதற்குரிய கடிதங்கள் குறிப்பிட்ட சில ஆசிரியர்களுக்கு வந்து சேர்ந்துள்ளன.

1989-ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள்களைத் திருத்திய ஆசிரியர்களுக்கு அதற்கான வேதனம் இன்னும் வழங்கப்படாமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ப-11கி

உ
சிவமயம்

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

## நூற்றாண்டு நிறைவு நாள்

**29 - 09 - 1990 சனிக்கிழமை**

மு. ப 8 - 30 மணி:
அருள்மிகு சிவஞானவைரவர் கோயிலில் சிறப்பு வழிபாடு

மு. ப. 9 - 30 மணி:
வாழ்த்துரைகள்

மு. ப. 10 - 30 மணி:
சிறுவர்களுக்கு ஏடு தொடக்கல்

மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், அபிமானிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

க. ச. குகதாசன் — அதிபர்
சு. டிவகலாலா — செயலாளர் ப, மா. ச.

க, பூபாலசிங்கம்
செயலாளர் பா. அ. ச.

09093

# மேலும் ஒரு தொகுதியினருக்கு பயிலுநர் ஆசிரிய நியமனம்

பயிலுநர் ஆசிரியர்களாக மேலும் ஒரு தொகுதியினர் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

ஏற்கனவே பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு பதவியேற்காதோருடையவும், நியமனத்தின் பின்னர் பதவிதுறந்தோருடையவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் இப்புதிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன

இதற்கென புதிதாக விண்ணப்பம் கோரப்படமாட்டாது, நேர்முகப் பரீட்சையும் இடம்பெறாது.

ஏற்கனவே இடம்பெற்ற நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில், அடுத்தடுத்த நிலையில் புள்ளிகள் பெற்றோருக்கு இந்த நியமனங்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நாடுதோறும் உள்ள வெற்றிட விபரங்கள் தற்பொழுது சேகரிக்கப்பட்டு வருகின்றன. (கி)

## நெல்சன் மண்டேலாவுக்கு இந்தியாவின் பஜாஜ் விருது

இந்தியாவின் ஜம்னலால் பஜாஜ் நிதியத்தின் இவ் ஆண்டுக்கான விருது ஆபிரிக்காவின் தேசிய விடுதலை வீரர் நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விருது ரூபா ஐந்து இலட்சம் ரொக்கப் பணத்தையும் கொண்டது.

இதனை அறிவித்த நிதியத்தின் தலைவர் ராம் கிஷான் லால் பஜாஜ் நிதியத்தின் மற்றொரு விருது சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஏ.ரி. ஆரியரத்தினவுக்கு வழங்கப்படும் எனவும் கூறினார். (11கி)

## திலீபன் நினைவாக தொல்புரத்தில் அன்னதானம்

தியாகி திலீபனது மூன்றாவது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் தொல்புரம் பத்தானைக் கேணியடியில் அமைக்கப்பட்ட பந்தலில் தாகசாந்தியும், அன்னதானமும் அவ்வூர் பிரபல சமூக சேவையாளரான கந்தர் சுப்பிரமணியத்தினால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் பெருந்தொகையான பொதுமக்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (7-கி)

## புங்குடுதீவில் ஒருகுடம் தண்ணீர் இப்போது 6ரூபாவாக விற்பனை

எரிபொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை சாட்டாக வைத்து புங்குடுதீவுப் பகுதியில் வீடுகளில் தண்ணீர் விற்பனையில் ஈடுபட்டு வரும் ஒரு சில வியாபாரிகள் பொது மக்களிடமிருந்து அதிக பணத்தைப் பெற்று கொள்ளை லாபம் பெற்று வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை ஒரு பக்கமிருக்க இந்தத் தண்ணீர் விற்பனையிலும் பெரும்தில்லுமுல்லு ஏற்பட்டிருப்பதாக அப்பகுதியில் உள்ள மக்கள் குறைப்படுகின்றார்கள்.

வேலணை சாட்டிப்பகுதியிலிருந்து உழவு இயந்திரங்கள் மூலமாக குடிதண்ணீரைக் கொண்டுவந்து விநியோகித்து வரும் சில வியாபாரிகள் கூடிய தொகைப்பணத்திற்குத் தண்ணீரை விற்பனை செய்து வருகின்றனர்.

இப்பகுதியில் ஒரு குடம் தண்ணீர் 5 ரூபா தொடக்கம் 6 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது 1 கலன் தண்ணீர் இரண்டு ரூபா ஐம்பது சதமாக விற்பனையாகிறது.

அத்தோடு அளவிலும் மோசடி இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 20கி

## பண்டத்தரிப்பு கோட்டக் கூட்டம்

பண்டத்தரிப்பு உதவிக்கல்விப்பணிப்பாளர் பிரிவைச் சேர்ந்த சகல கொத்தணி அதிபர்களையும், கல்வி அதிகாரிகளையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பண்டத்தரிப்புப் பணிமனையில் கூடுமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் இ சிவானந்தம் பணித்துள்ளார்.

பதில் அதிபர்களை நிரந்தரமாக்கும் விண்ணப்பப் படிவத்தை சகல தகுதி வாய்ந்த அதிபர்களிடமும் இரட்டைப் பிரதிகளில் பெற்றுவருமாறும், பாடசாலை மற்றும் நிறுவனங்களில் கற்பித்தல் கடமை புரியும் ஆசிரியர்களது விபரங்களையும், அதிபர், ஆசிரியர்களது முகவரி விபரங்களையும் கொண்டு வருமாறும் மேற்படி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (32 கி)

## இப்போது விண்ணப்பிக்கலாம்

## பயிற்சி ஆசிரியர்களுக்கு தொலைக்கல்விப் பயிற்சி

மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் நியமனம் பெற்றுள்ள பயிற்சி ஆசிரியர்களுக்கு தொலைக்கல்வி முறை மூலம் தொலைசார் விருத்தி பயிற்சி வழங்குவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

தற்போது பாடசாலைகளில் சேவைபுரியும் பட்டதாரியல்லாத பயிற்சி ஆசிரியர்களிடமிருந்து இதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிக்கான பதிவுக்கட்டணம் 100 ரூபாவாகும் இக் கட்டணம் செலுத்துதல் பற்றிப் பின்னர் தெரிவிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பத்துடன் பணம் அனுப்புதல் கூடாது.

இதற்கென விண்ணப்ப முடிவுத்திகதி அக்டோபர் 31ம் திகதி ஆகும். விண்ணப்பங்கள் பணிப்பாளர், தொலைக்,கல்வித்துறை, கல்வியமைச்சு, இசுருபாய பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். ப-11கி

## அதிபர் சேவை போட்டிப் பரீட்சை

இலங்கை அதிபர் சேவையின் முதலாம், இரண்டாம், மூன்றாம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் முதலாவது வினைத்திறமைகாண்தடைப்பரீட்சை தாபனக்கோவையின் ஏற்பாடு, பாடசாலைகளின் நிதி, முகாமைத்துவம், கல்வி நிர்வாகமும் மேற்பார்வையும் ஆகிய துறைகளில் இப் பரீட்சை நடைபெறும்.

அதிபர் அல்லது கோட்டக் கல்வி அதிகாரி அல்லது பிரதம கல்வி அதிகாரி அல்லது பிரதேசக்கல்விப்பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர், மலேவீதி, கொழும்பு -2 என்ற முகவரிக்கு அக்டோபர் 10ம் திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும். (ப-11கி)

## இக்கடிதங்கள் உங்களுடையதா?

அல்வாய்:- டி. யோகம்மா இடந்திரவத்தை அல்வாய் மேற்கு, எஸ். கணேசலிங்கம் அல்வாய் தெற்கு,

சண்டிலிப்பாய்;-எ'ம்.மகேஸ்வரன் மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்,

சங்கானை:- ஆர். இந்திரன் திருத்தணிகை, சிவம்புள்ளியடி சங்கானை,

வட்டுக்கோட்டை :- ஆர். ஆனந்தம், கலுவாத் துறை, வைரவர் கோவல், அராலி தெற்கு, ரி. கணேஷவரதன், தர்மபதி, மூளாய் றோட், சி. குணநாயகம், வட்டு- கிழக்கு, வசுமதி தயாபரன்;''காஞ்சி'' சிவன் கோவிலடி, வட்டு - மேற்கு, வி. வேலுப்பிள்ளை சுரத்திப்பனை, அம்மன் கோவில் வட்டு - கிழக்கு

ஏழாலை :- ரி. சிவபாதசுந்தரம் நைகண்ணி, ஏழாலை- மேற்கு.

தெல்லிப்பழை :- பி. விஜயகுமார், கௌரிபவனம், வீமன்காமம்.

காங்கேசன்துறை:- ஏ. பத்மநாதன், கலைவாணி றோட், தையிட்டி, எஸ். செல்லையா, மூர்த்தி வீதி - விக்கினேஸ்வரன் றோட், தையிட்டி.

நல்லூர் :- கே. சுந்தரம் பிள்ளை, சங்கிலியன் வீதி, நல்லூர்.

நாவாந்துறை ;- டி. சாந்தி

பலாலி :- பொன்னர் ராசநாயகம், சென்யூட் லேன்.

அச்சுவேலி :- பி. சித்திலிங்கம், தோப்பு.

கொக்குவில் :- கே. கதிரவேல் வளர்மதி, புகையிரத வீதி, கெதரலிங்கம், லஷ்மிபுரி, கல்லூரி வீதி.

இளவாலை:- எஸ். பாலசுந்தரம் பெரியவிளான்.

துணுக்காய்:-வி. அன்பராஜ் யூனிற் 1, யோகபுரம்,

(தொடரும்)

## தலைக் கவசம் இனி அவசியம்

எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் செலுத்துவோரும், பின்னால் அமர்ந்து செல்வோரும் ஹெல்மட் அணிவது மீண்டும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதனை மீறுவோர் மீது பொலிசாரினால் ரூபா நூறு உடனடி அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (11, கி)

## யாழ். கோட்டை அமைப்பு

ஒருவன் அசாதாரண செயலையாற்றி சாதனை நிலைநாட்ட முற்படுகையில் 'என்னப்பா நீ கோட்டையையா பிடிக்கப் போகிறாய்?' என்று எகத்தாளமாக அவனை நோக்கிக் கேட்பது சமூகத்தில் இன்றும் வழக்கில் உள்ளது. ஆக, கோட்டையைப் பிடிப்பது என்பது எளிதானதொன்றல்ல என்பது இங்கே தெளிவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது.

இந்த வகையிலான யாழ். கோட்டையை தம் அமானுஷ்ய சக்தியால், இலட்சிய வேட்கையுடன் கைப்பற்றி அங்கு புலிக்கொடி ஏற்றியுள்ளனர் தமிழீழ விடுதலைப் புலிகள்.

மேற்படி கோட்டையின் வரலாறு பற்றி பிரபல நாவலாசிரியர் செங்கை ஆழியான் 'முரசொலி' வாசகர்களுக்காக ''களம் பல கண்ட யாழ் கோட்டை'' என்ற தலைப்பில் பதினாறு அங்கங்களாக அளித்தார். வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற அக்கட்டுரையிலிருந்து கோட்டை வடிவமைப்பு பற்றிய சில முக்கிய அம்சங்கள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

- ஒல்லாந்தத் தளபதி வன்கோயன் இன்றைய யாழ். கோட்டையைக் கட்டினான். இன்றைய யாழ்ப்பாணக் கோட்டை பத்தேவியாவில் உள்ள கோட்டையிலும் பார்க்கப் பெரியது. பன்ரகன் ஐந்துகோண வடிவம் கொண்டது.
- இக்கோட்டையில் ஐந்து பெரிய கொத்தளங்களும் 142 பீரங்கித் தளங்களும் அமைந்தன. ஐந்து காவலரண்களும் இருந்தன. அகன்ற அகழி கோட்டையைச் சுற்றி அமைந்தது. உள்கோட்டைக்கும் அகழிக்கும் வெளியில் புறச்சுவர் அமையும் ஏறத்தாழ 12 ஏக்கர் பரப்பில் இக்கோட்டையை ஒல்லாந்தர் அமைத்து முடித்தனர்.
- இக்கோட்டையின் வாசல் தென்கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கின்றது. உள்மதில் வாசல் அகழியின் மேலிட்ட பாலத்தினால் இணைக்கப்பட்டிருக்கின்றது. ஒல்லாந்தர் அப்பாலத்தை உள் மதிலோடு ஒதுக்கிப் பாதையைத் துண்டிக்கலாம் தேவையான பாலத்தை இறக்கி இணைக்கவும் வசதிகளைக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு மதில்களுக்கும் கீழ் உள் வழிகள் எப்புறமும் நகர வாய்ப்பானவையாக உள்ளன. சுரங்கப்பாதைகள் அகழிக்கு வரவும் அவசர காலத்தில் கோட்டையைவிட்டு வெளியேறவும் அமைக்கப்பட்டிருந்தன.
- இப் பன்ரகன் கோட்டைக்குள் சொக்கட்டான் வடிவ கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றையும் ஒல்லாந்தர் அமைத்தனர்.

  இக்கோட்டையின் ஐங்கோணச் சுவர்கள் ஒவ்வொன்றும் ஏறத்தாழ 850 அடி நீளமானவை. ஒல்லாந்தரின் உட்கோட்டையின் சுற்றளவு ஏறத்தாழ 4250 அடிகளாகும்.
- இக்கோட்டை ஒரு பக்கம் பண்ணைக் கடலையும் ஏனைய நான்கு பக்கங்களிலும் 120 அடி அகலமான அகழியையும் கொண்டிருக்கின்றது. நீரும் சுரியும் கொண்டதாக இந்த அகழி காணப்படுகின்றது. கோட்டையின் மத்தியில் படைவீரர்கள் கூடுவதற்குப் பெரியதொரு மைதான வெளியும் கோட்டையின் உட்சுவரோடு அதிகாரிகளின் வீடுகளும் படைவீரர் பாசறைகளும் அமைக்கப்பட்டிருந்தன.
- ஒல்லாந்தர் தென்கிழக்காசியாவில் கட்டப்பட்ட கோட்டைகள் அனைத்திலும் பெரியதும், பலமானதும் யாழ்ப்பாணக் கோட்டையாகும்.
- ஒல்லாந்தரின் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் கொத்தளங்களிலிருந்த பீரங்கிகளை விட 64 பீரங்கிகளை இழுக்கும் குண்டுகளுமிருந்தன. அவற்றிலும் பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன 57 ஆயிரம் இறாத்தல் வெடிமருந்து ஒல்லாந்தக் கோட்டையில் எப்போதும் இருந்தது. 350 சேனா வீரர்களுடன் 31 ஆராச்சிமாரும், 4 கங்காணிகளும்799 லாஸ்கொறின்சுகள்கொண்ட படையும் கோட்டைக்கு வெளியில் யாழ்ப்பாணப் பரப்பில் இருந்தனர். கோட்டைக்குள்ளிருந்த கிறிஸ்தவ தேவாலயம் இருபாலையில் இதற்கென அரிவிக்கப்பட்ட செங்கற்களினால் கட்டப்பட்டது.
- 1795-செப்டெம்பர் 23ல் யாழ். கோட்டையை ஆங்கிலேயர் தம்வசமாக்கியதும் அங்கு ''குயின்ஸ் ஹவுஸ்'' எனப்படும் ராணி மாளிகையை அமைத்துக் கொண்டனர். விக்டோறியா மகாராணியின் முழு அளவிலான ஓவியத்தையும் அதில் மாட்டி வைத்தனர். அது இன்றுமுள்ளது. ஆள்பதிகள் தங்கிச் செல்லும் மாளிகையாக ராணிமாளிகை விளங்கி வந்தது 250 அடி நீளமான விறாந்தையைக் கொண்ட இந்த மாளிகையில் முழு மாட்டை அப்படியே பொரிக்கக் கூடிய வசதிகொண்ட சமையலறை இருந்தது. (ஸ்ரீ)


## இளங்கலைஞர் மன்ற சங்கீத நடன வகுப்புக்கள் ஆரம்பம்

இளங்கலைஞர் மன்றத்தின் நடப்பு ஆண்டிற்கான ஆரம்ப மாணவர் சங்கீத, நடன வகுப்புக்கள் (வாய்ப்பாட்டு, வாத்தியம், நடனம்) மன்ற மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை (29 9 90) மாலை 4. மணிக்கு விஜயதசமி பூஜை நிறைவெய்தியதும், ஆரம்பித்து வைக்கப்படும்.

வகுப்புக்களிற் சேரவிரும்பும் மாணவர்களையும், மன்ற ஆசிரியர்கள், பழைய-தற்போதைய மாணவர்கள், மன்ற அபிமானிகள் அனைவரையும் இவ்வைபவத்திற்கு அன்புடன் அழைக்கின்றோம்.

பொன் சுந்தரலிங்கம்
மன்றத் தலைவர்

சட்டநாதர் கோவில் வீதி,
யாழ்ப்பாணம், 27. 9. 90

09097

நவராத்திரிச் சிந்தனை - 10

## வாணியின் திருவுருவப் பொலிவு

ஞானமே வடிவாக இருப்பவள் சரஸ்வதி. அவளுடைய திருவுருவை சற்று நெருங்கிப்போய் நோக்குகிறான் கவிஞன். புதிய, புதிய அர்த்தங்கள் புலப்படுகின்றன.

வேதம் கலைமகளுக்குக் கண் வேதத்துக்கு எழுதப்பட்ட விளக்கங்கள் — உரைகள் — கண்ணுக்குத் தீட்டிய மை. பிறைச் சந்திரன் நெற்றி. சிந்தனை அவள் கூந்தல்.

தருக்கம் சரஸ்வதியின் செவி, துணிவு அதில் அணிந்துள்ளதோடு: அறிவு அவளுடைய மூக்கு. சாத்திரம் வாய். கற்பனை வாயிதழ் காவியம் கொங்கை

அழகுக் கலைகள் அவள் கைகள்

சுவை படக் கவிதை தொடுக்கும் புலவர்களின் நா அவளுடைய பாதம் (அல்லது இருப்பிடம்)

பாரதி கண்ட கலைவாணியின் தோற்றப் பொலிவு இது:

வேதத் திருவிழியாள் — அதில்
மிக்கபல் லுரையெனும் கருமையிட்டாள்
சீதக் கதிர்மதியே — நுதல்
சிந்தனையே குழல் என்றுடையாள்
வாதத் தருக்கமெனும் — செவி
வாய்த்த நற்றுணிவெனும் தோடணிந்தாள்
போதமென் நாசியினாள் — நலம்
பொங்குபல சாத்திர வாயுடையாள்

கற்பனைத் தேனிதழாள் — சுவைக்
காவியம் எனுமணிக் கொங்கையினால்
சிற்பமுதற் கலைகள் — பல
தேமலர்க் கரமெனத் திகழ்ந்திருப்பாள்
சொற்படு நயமறிவார் — அசை
தோய்ந்திடத் தொகுப்பதின் சுவையறிவார்
விற்பனத் தமிழ்ப்புலவோர் — அந்த
மேலவர் நாவெனும் மலர்ப்பதத்தாள்!

## கோண்டாவில் குண்டுவீச்சில் பல வீடுகள் சேதமடைந்தன

நேற்று நண்பகல்கோண்டாவில் கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சில் ஒரு வீடு பலத்த சேதமடைந்ததுடன் மேலும் மூன்று வீடுகள் சேதத்திற்குள்ளாகின.

தொடர்ந்து மூன்று தடவைகள் குண்டு வீச்சு விமானங்களால் வீசப்பட்ட குண்டுகளால் கோண்டாவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ந. சண்முகரத்தினம் என்பவரது வீடு படுமோசமாகச் சேதமடைந்துள்ளது.

ந. விக்கினராஜா, ந. சிவானந்தம், நா. நடராசா ஆகியோரது வீடுகளும் சேதமடைந்ததுடன் விக்கினராஜா என்பவரது வீட்டு கராஜில் நின்ற கார் தீப்பற்றி எரிந்து பாவனைக்குதவாத நிலைக்[illegible]கப்பட்டுள்ளது. 66கி

### இந்திய அமைச்சர் குஜ்ரால்

## இலங்கை இனப்பிரச்சினைக்கு ராணுவத்தீர்வு சாத்தியமாகாது

இலங்கை இனப்பிரச்சினைக்கு ராணுவ நடவடிக்கைகள் மூலம் தீர்வுகாண முடியாது. தமிழரின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றின் மூலமாகவே இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில்நடைபெற்ற வெளியுறவுச்சபை மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் குஜ்ரால் ஜனநாயக உரிமை, மனித உரிமை இவற்றை பாதுகாக்கும் அடிப்படையிலேயே தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றார். (து)

**கோட்டை...**

படாததினால் கோட்டைப் பகுதிக்கு செல்ல பொது மக்கள் நேற்றும் அனுமதிக்கப்படவில்லை. 16 கி

## காலமானார்

### திரு. பொன்னம்பலம் பத்மநாதன்

பொன்னம்பலம் பத்மநாதன் (உதயன் - அர்ச்சுனா விநியோகப் பகுதி ஊழியர்) 27 - 09 - 1990 அன்று அகால மரணமானார். இவர் மோகனவல்லி (ஆசிரியை கீரிமலை. நகுலேஸ்வர மகா வித்தியாலயம்) இன் அன்புக்கணவரும், சிவகுமார், சுரேஸ்குமார், விமலினி, கணேஷ்குமார், வினிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், தயா, நந்தன், திருமதி பத்மநாதன், திருமதி மதனசேகரம் ஆகியோரின் அன்பு சகோதரரும் நடராசா, கவிமுத்துமணி, சிவநேசன், திருஞானசம்பந்தர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28-09-1990) நண்பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் மாரீசங்கூடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மு. சிவநேசன்
(மைத்துனன்)

மாரீசங்கூடல்,
இளவாலை.

09098

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 28 09-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# யாழ். 5 வங்கிகளுக்கும் வாராந்தம் 10 கோடி ரூபா தேவையாகிறது

யாழ்.மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, வர்த்தக வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி ஆகிய ஐந்திலும் கடந்த மூன்று மாத காலத்திலும் ஏற்பட்டுள்ள பணப் புழக்கமின்மை குறித்தும் அதனால் விளைந்துள்ள பாதிப்புகள் குறித்தும் யாழ்.பிரஜைகள் குழு ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் விவரித்துள்ளது.

இவ்வங்கிகளுக்கு வாராந்தம் 20 மில்லியன், (2 கோடி ரூபா வீதம்), 100 மில்லியன் ரூபா, (பத்துக்கோடி ரூபா) அனுப்பி வைத்தல் தேவையாகிறது என்று இம்மகஜரில் கோரப்பட்டுள்ளது.

இப்பணப்புழக்கமின்மையால் வர்த்தகப் பரிவர்த்தனைகள் பணச்சுழற்சி முதலானவை முடக்கம் கண்டுள்ளதாக இம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஸ்ரீ

## நிர்வாக சேவைப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

இலங்கை நிர்வாக சேவையில் ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் [கோரப்பட்டுள்ளதாக வடகிழக்கு மாகாணசபை உள்துறை அமைச்சுச் செயலாளரினால் யாழ் அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிவித்தல் நேற்றுக் கிடைக்கப்பெற்றுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியுமென்றும் இது தொடர்பான விபரங்களை யாழ் செயலக உதவி அரசாங்கஅதிபர் திரு செ. நித்தியராஜனிடம் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவுத்திகதி இன்று என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் திகதியை நீடிக்குமாறு யாழ் அரச அதிபர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சைக் கேட்டுள்ளார். (66-து)

## வைத்தியசாலை இயக்கம் இதுவரை எந்த அறிவிப்பும் இல்லை

யாழ். செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், ஊழியர்கள் உட்பட அநேகர் நேற்று வேலைக்குச் சமுகமளித்திருந்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலை மீள இயங்கவைப்பது தொடர்பாக யாழ். அரச அதிபரிடம் வினாவிய போது இது பற்றி கொழும்பிலிருந்து இதுவரை தனக்கு எந்த அறிவித்தல்களும் கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்தார். வங்கிகள் விரைவில் இயங்க வைப்பது தொடர்பாக தான் ஆலோசித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (66 து)

## மேஜர் செல்வராஜா வீதி

மேஜர் செல்வராஜா நினைவாக கோண்டாவில் மேற்கு முத்தட்டி மட வீதி மேஜர் செல்வராஜா வீதி என அவ்வூர் மக்களால் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இன்று திறக்கப்படவுள்ளது.

### பால்பாயாசத்துடன் வெற்றி விழா

யாழ்ப்பாணக் கோட்டை விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டு புலிக் கொடி அங்கு ஏற்றப்பட்ட, நிகழ்ச்சியைக் கொண்டாடுமுகமாக அரியாலை, துண்டி, கொழும்புத்துறை எங்கணும்வீதி வீதியாக வெடிகள் கொளுத்தி ஆரவாரம் செய்த பொதுமக்கள் முக்கிய இடங்களில் பாற்கஞ்சி, பாயாசம் போன்ற தித்திக்கும் உணவுகளை வழங்கி மேற்படி நிகழ்ச்சியை வெற்றி விழாவாகக் கொண்டாடினார்கள். அவர்கள் தம் உபசாரங்களினால் போராளிகளையும் திணறவைத்தனர். (ஸ்ரீ)

## மண்டைதீவு முகாம் வாபஸ் ரஞ்சன் ஊர்ஜிதம்

''எழுபத்து இரண்டு மணித்தியாலங்களுக்குள் மண்டைதீவு இராணுவ முகாம் முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டு விடும்'' என்று பெருந்தோட்டத் தொழில் துறை, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜயரத்ன கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்தே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

எனினும் அயலில் உள்ள அல்லைப்பிட்டி முகாம் தொடர்ந்தும் இருக்கும் என்றார் அவர். ஸ்ரீ

## அதிகாரிகள் மாநாடு

உதவி அரசாங்க அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர்களுக்கான மாநாடு 29. 9. 90 அன்று சனிக்கிழமை யாழ். அரச அதிபர் திரு.அன்ரன் அல்பிறட் தலைமையில் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

உணவுப் பங்கீடுகள் தொடர்பாகவும் வங்கிகளை மீள இயங்கவைத்தல் மற்றும் அத்தியாவசிய தேவைகள் தொடர்பான விடயங்கள் இம் மகநாட்டில் ஆராயப்படும்

**கோட்டையில்...**

சென்றனர். தங்களுடைய சிறுபிள்ளைகளைத் தூக்கி தூரத்தில் தெரிந்த புலிக்கொடியைக் காட்டி மகிழ்ந்ததையும் அவதானிக்க முடிந்தது.

வயது பேதமின்றி இளைஞர்களும், பெண்களும், முதியவர்களும் இதில் கூடியிருந்தனர்.

இதேவேளை நகரில் அமைந்துள்ள கடை உரிமையாளர்கள் தங்களது கடைகளைப் பார்த்து கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர்.

அத்துடன் குருநகர், பாஷையூர், கொட்டடி, நாவாந்துறை மற்றும் நகரை அண்டிய பகுதிகளிலிருந்து வெளியேறியிருந்த மக்கள் தங்களுடைய வீடுகளைப் பார்ப்பதற்காக அவ்விடங்களுக்கு விரைந்ததையும் அவதானிக்க முடிந்தது. (70-து)

**உதயன்...**

என்பவர் ஸ்தலத்தில் மரணமானார். மற்றும் அதே நிறுவனத்தில் பணிபுரியும் ஜோ. ஜெயந்தன் (24) என்பவரும் அப்புக்குட்டி சுகிர்தராஜா (35) என்பவரும் பலத்த காயமடைந்தனர்.

இந்த நிறுவனத்தின் மீது இரு பொம்மர்களும் மாறி, மாறி மூன்று குண்டுகளைப் பொழிந்தன. இதில் ஒரு குண்டு கைலாச பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக உள்ள நாவலர் வீதியில் விழுந்து வெடித்தது.

இத் தாக்குதலின் போது உதயன் நிறுவனத்திற்கு அருகாமையிலுள்ள வீடுகளும் பலத்த சேதமடைந்தன. (70, 33 கி)

**கோட்டையில் 5இரா....**

கருதப்படுகின்றது.

அத்துடன் இப்பகுதியில் மேலும் சில சடலங்களும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கிஸ்ரீ

**வீரமரணமடைந்த..**

சிமார் கோவிலடி, கே.கே.எஸ் வீதி, ஆஸ்பத்திரி வீதி, முனீஸ்வரன் வீதி வழியாக எடுத்து செல்லப்பட்டு கோட்டையின் வட, கிழக்கு திசையில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் தகனம் செய்யப்படவுள்ளது. என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். து

**இறந்தோர்..**

வைத்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளது.

ஜூன் மாதம் 11-ம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 25ம் திகதி வரை இம் மாவட்டங்களில் 400 பேர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஐந்து இலட்சம் பேர் அகதிகளாகி உள்ளனர் என்றும் இதில் கூறப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அகதிகள் எண்ணிக்கை 27 ஆயிரம், வவுனியா மாவட்டத்தில் 55 ஆயிரம் மன்னார் மாவட்டத்தில் 65 ஆயிரம், முல்லைத்தீவு மாவட்டத்தில் 63 ஆயிரம் என்றும் திருமலை மாவட்டத்தில் அகதிகள் எண்ணிக்கை 60 ஆயிரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1 லட்சத்து 35 ஆயிரம் அம்பாறை மாவட்டத்தில் 95ஆயிரம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ

**உலகில்..**

தெரிவித்தார்.

(பி.பி.ஸி கணிப்பின்படி இரண்டாவது, மூன்றாவது இடங்களை முறையே பாலஸ்தீனிய விடுதலை இயக்கமும் ஆபிரிக்கக் கொரில்லா இயக்கமும் பெறுவதாகவும் தேவர் அங்கு தெரிவித்தார். ப-1 கி

**கோட்டைராணுவம்..**

தும் தன்மையினது என்றும் இப்பிரதிநிதி தன் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, விடுதலைப்புலிகள் நெடுங்கால போராட்டத்திற்குத் தயாராகிவருவது ஸ்ரீ லங்கா அரசின் தீவிரவாதப் போக்கைக் கொண்டவர்கள் மத்தியில் சலிப்பை உண்டுபண்ணியுள்ளதாக நேற்றிரவு பி.பி.ஸி செய்தியாளர் தனது அரசியற் கண்ணோட்டத்தில் தெரிவித்தார் ஸ்ரீ